www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr. 13 (2022) | 43 | T | I |

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. பைபிள் என்பதன் கிரேக்க சொல்.
    (1) பிபிலியா 2) பிபிளுஸ் 3) பப்றஸ் 4) வல்கேற் 5) வுல்காத்தா

02. புதிய ஏற்பாட்டு நூல் முதலில் எழுதப்பட்ட மொழி
    1) எபிரேயம் 2) அரமேயம் 3) கிரேக்கம் 4) இலத்தீன் 5) உருது

03. வெளிப்பாடு என்பதற்கான கிரேக்க சொல்
    1) தியோப்னெட்டோஸ் 2) நெகேபு 3) அபாத்
    4) அபோகளிப்ஸ் 5) வுமாத்

04. இதயத்தின் வடிவைக் கொண்டுள்ள கடல்
    1) சாக்கடல் 2) கலிலேயாக்கடல் 3) கரீபியன் கடல்
    4) செங்கடல் 5) அரபிக்கடல்

05. தாவீது அரசன் காலத்தில் அரசியல், சமய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற தலைநகர்
    1) எருசலேம் 2) கானா 3) எபிரோன்
    4) நாசரேத் 5) பெத்லகேம்

06. அரச செலவுகளை ஈடு செய்வதற்காக சாலமோன் அரசன் மேற்கொண்ட நடவடிக்கை.
    1) அந்நிய நாடுகளிடம் கடன் வாங்குதல்.
    2) வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    3) கைத்தொழில் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
    4) மக்களிடம் அதிக வரி வசூலித்தல்.
    5) யுத்தங்களை மேற்கொள்ளுதல்.

07. ஆயத்துவ இறை ஏவுதல் பெற்றவர்கள்.
    1) இறைவாக்கினர் 2) வரி வசூலிப்பவர் 3) படைவீரர்
    4) திருத்தூதர்கள் 5) நீதித்தலைவர்கள்

08. யாவே மரபின் பண்புகளில் ஒன்றாயமைவது.
    1) இறைவாக்கினருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுதல்
    2) காட்சி, கனவு வழியாக உரையாடுதல்
    3) உடன்படிக்கையை மீறினால் நாடு கடத்தப்படுவர்
    4) மோசேயின் புதுமைகள் குறிக்கப்பட்டிருத்தல்
    5) இறை நம்பிக்கைக்கு முதலிடம் அளித்தல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

09. மனிதன் என்பதற்குரிய எபிரேயச் சொல்
1) றதா 2) ஈஷா 3) ஆதாமா 4) அபாத் 5) பிறபெற்றஸ்

10. நன்மை தீமை அறியும் மரம் என்பது குறிப்பது.
1) சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்
2) சாகாவரத்தை குறிக்கும்
3) மொழிக் குழப்பம்
4) மீட்பின் செய்தி
5) இறை உறவு

11. சீனாய் உடன்படிக்கையின் மூலமாக இஸ்ரயேல் மக்கள் பெற்ற விசேடமான ஆசீர்.
1) அர்ப்பணிக்கப்பட்ட தூய இனம்
2) பிறருக்காக ஆசீர்
3) நாட்டை உரிமையாக்குதல்
4) இறைவனின் விசேட பார்வை
5) பிறக்காக பரிந்து பேசுதல்

12. மெசியா என்பதன் கிரேக்க சொல்.
1) மஷியா 2) எப்ராத்தா 3) தெகிலீம்
4) கிறிஸ்டோஸ் 5) சலரேரியோன்

13. ‘இறைவனின் அன்பின் இறைவாக்கினர்’ என அழைக்கப்படுபவர்
1) ஆமோஸ் 2) எசாயா 3) எரேமியா 4) எசேக்கியேல் 5) ஒசேயா

14. செபத்தின் புதையல் என அழைக்கப்படுவது.
1) நற்செய்தி நூல்கள் 2) இறைவாக்கினர் நூல்கள் 3) திருப்பாடல்கள்
4) இலக்கிய நூல்கள் 5) சட்ட நூல்கள்

15. இயேசுவின் பிறப்பின் செய்தி முதலில் அறிவிக்கப்பட்டது.
1) வரி தண்டுபவர் 2) அரசர்கள் 3) ஞானிகள்
4) பெண்கள் 5) மந்தை மேய்ப்பவர்

16. ‘சாதோக்’ எனும் குருவின் பரம்பரையில் வந்த சமயக் குழுவினர்
1) பரிசேயர் 2) சதுசேயர் 3) மறைநூல் அறிஞர்
4) செலஸ்தியர் 5) எசீனியர்

17. ‘லோகோஸ்’ என்ற கிரேக்க சொல்லின் பொருள்.
1) வார்த்தை 2) மீட்பு 3) அருங்குறிகள்
4) இறையாட்சி 5) உவமைகள்

18. பவுல் எருசலேமில் பிற இனத்தவர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டுவார் என எதிர்வு கூறிய இறைவாக்கினர்.
1) எசாயா 2) எரேமியா 3) ஒசேயா 4) அகபு 5) எசேக்கியேல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

19. யோவான் நற்செய்தியில் மட்டும் குறிப்பிடப்படும் அருங்குறி.
    1) முடக்கு வாதக்காரன் சுகம் பெறுதல்
    2) தீய ஆவி பிடித்தவர் சுகம் பெறுதல்
    3) தண்ணீரை திராட்சை இரசமாக்குதல்
    4) குஸ்டரோகியை சுகப்படுத்துதல்
    5) 5000 பேருக்கு உணவளித்தல்

20. பவுலின் இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தின் போது பிலிப்பியில் நிகழ்ந்த நிகழ்வொன்று.
    1) எலிமா எனும் போலி இறைவாக்கினர் பார்வையை இழத்தல்
    2) லீதியா எனும் செந்நிற ஆடைவிற்கும் பெண்ணின் வீடு பணித்தளமாகியது
    3) யுத்திகு எனும் இளைஞன் உயிர் பெறல்
    4) கால் ஊனமுற்றவர் சுகம் பெறல்
    5) மந்திர வாதிகள் மனந்திரும்புதல்

21. இயேசுவின் திருத்தூதுவர்கள் பன்னிருவரில் சாதாரண மக்கள் சமூகத்தைச் சேராதவர்கள்
    1) சீமோன், அந்திரேயா    2) சீமோன், யோவான்    3) பிலிப்பு, யாக்கோபு
    4) மத்தேயு, பர்த்தலமேயு    5) தோமா, யூதாஸ்காரியோத்து

22. மறு பிறவி பற்றி நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது காரணியாய் அமைவது.
    1) பாஸ்கா உணவு
    2) தீய ஆவியை விரட்டுதல்
    3) காற்றையும் கடலையும் அடக்குதல்
    4) திருத்தூதர்களுக்கு தோன்றுதல்
    5) வெறுமையான கல்லறை

23. திருக்கோவிலின் திரை இரண்டாகக் கிழிதலின் மூலம் அடையாளப்படுத்தப்படுவது?
    1) இயேசு உயிர் விட்டார் என்பதை உறுதிப்படுத்துதல்
    2) இறைவனிடம் செல்லும் வழி திறக்கப்பட்டுள்ளது.
    3) இறை பிரசன்னம் இல்லை என்பது தெளிவு
    4) இயேசுவின் வேதனை வெளிப்படுதல்
    5) கல்லறைகள் திறக்கப்படுதல்

24. இயேசுவின் பாடுகள், மரணம் ஆகிய நிகழ்வுகள் வழியாக தூய மத்தேயு இயேசுவைப் பற்றி வெளிப்படுத்தும் முக்கிய விடயம் அவர்.
    1) மெசியா என்பதாகும்.    2) ஒரு விடுதலை வீரன்    3) யூதரின் அரசன்
    4) குற்றமற்ற ஒருவர்    5) இறைமகன்

25. மனித மனங்களுக்குள்யே இறையாட்சி வளர்ச்சியடைவது மிக நுண்ணிய விதத்திலாகும் என்பதனை விளக்கும் உவமை.
    1) களைகள்    2) முத்து    3) புளிப்பு மா    4) புதையல்    5) வலை

26. தூய மத்தேயு நற்செய்தியின் படி அரிமத்தியா யோசேப்பு என்பவர்
    1) சிலுவையை சுமந்து செல்ல உதவியவர்
    2) இயேசுவின் மரணத்திற்கு உடந்தையாயிருந்தவர்
    3) நித்திய வாழ்வு பற்றி கேட்ட பரிசேயன்
    4) இயேசுவைப் பின் பற்றிய ஒரு நபராவார்
    5) இறையாட்சியின் வருகைக்காக காத்திருந்தவர்.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

27. பிறருக்கு மன்னிப்பளித்தல் இறைவனிடமிருந்து மன்னிப்பு பெறுவதற்கு வழிகாட்டுகின்றது என்பதை நோக்கமாகக் கொண்ட உவமை.

1) அத்திமரம் 2) பத்து தோழியர் 3) மன்னிக்க மறுத்த பணியாளன்
4) தாலந்து 5) திருமண விருந்து

28. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A. குருக்கள், மறைநூல் அறிஞர், தலைமைக்குரு அங்கத்தவராவர்
B. யூதரின் சமய, சிவில் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும்
C. திரு விழாக்கள் கொண்டாடப்படும்
D. மரண தண்டனை வழங்க அதிகாரம் உண்டு

இவற்றுள் செனத்திரின் நீதிமன்றத்துடன் தொடர்புடைய விடயங்கள்

1) A,D 2) B,C 3) A,C 4) C,D 5) A,B

29. இயேசுவிற்கு நறுமணதைலம் பூசும் நிகழ்வு இடம் பெற்ற இடம்.

1) பெத்தானியாவில் இலாசரு வீட்டில்
2) பெத்தானியாவில் சீமோன் வீட்டில்
3) நாசரேத்தில் பேதுரு வீட்டில்
4) எருசலேம் தேவாலயத்தில்
5) கெத்சமனே தோட்டத்தில்

30. மோசேயின் பத்துக்கட்டளைகளைப் போன்று இயேசு எமக்களித்த கட்டளைகளாவன

1) எட்டுப்பேறுகள் 2) ஐந்து போதனைகள் 3) இரண்டு கட்டளைகள்
4) ஆறுபத்தாறு உவமைகள் 5) ஏழு சிலுவை வார்த்தைகள்

31. திருமறையைப் போதிக்கின்ற சபைத் தலைவர்களின் பொறுப்பு பற்றி எடுத்துக் கூறும் உவமை.

1) பத்துத் தோழியர் 2) தாலந்து 3) நம்பிக்கைக்குரிய பணியாளர்
4) அத்திமரம் 5) கடுகு விதை

32. “இறைமகனே உமக்கு இங்கு என்ன வேலை குறித்த காலம் வரும் முன்னே எங்களை வதைக்கவா இங்கே வந்தீர்” இக் கூற்றுடன் தொடர்புடைய சம்பவம்

1) பேதுருவின் மாமியார் குணமடைதல்
2) நூற்றுவர் தலைவரின் மகன் குணமடைதல்
3) பத்து தொழுநோயாளர் சுகம் பெறுதல்
4) முடக்கு வாதக்காரன் குணமடைதல்
5) கதரேனர் பகுதியில் பேய் பிடித்த இருவர் நலமடைதல்

33. ‘என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்’ என இயேசு கூறிய நிகழ்வு.

1) சிலுவையில் இயேசு உயிர் விடுதல்
2) எருசலேம் பவனி
3) கெத்சமனே தோட்ட செபம்
4) தலைமைச் சங்க விசாரணை
5) நாசரேத்தூர் தொழுகைக் கூடம்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

34. 'இதே ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப் போல நான் உங்களை அனுப்புகிறேன்' என இயேசு சீடர்களை பணிக்கு அனுப்பும் போது கூறினார் இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் விடயம்
   1) சுகபோக வாழ்வை மேற்கொள்ளலாம்
   2) பிரிவினை ஏற்படுத்துவோரை வெளியேற்றுதல்
   3) புறங் கூறப்படுதல்
   4) சமூகத்தில் புறக்கணிக்கப்படுதலும் தாழ்ச்சிக்குட்படுதலும்
   5) ஏற்றுக் கொள்பவர்களை நேசித்தல்

35. தூய பவுல் அன்பு என்பதற்குப் பயன்படுத்தும் 'அகபே' எனும் சொல்லின் மூலம் கருதப்படுவது.
   1) உடலை எரிபலியாக ஒப்புக் கொடுத்தல்
   2) நம்பிக்கையோடு தியாகம் செய்தல்
   3) பிறரின் தவறுகளில் மகிழ்வுறாமை
   4) உலக காரியங்களில் நாட்டம் கொள்ளல்
   5) எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராது பிறர் தீமை செய்தாலும் நன்மை செய்தல்

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

36. இல்லற வாழ்வில் மனைவி கணவனுக்குப் பணிந்திருத்தலும் கணவன் மனைவியில் அன்பு செலுத்துவதும் கட்டாயம் என பவுல் கூறும் திருமுகம்.
   1) கலாத்தியர் 2) எபேசியர் 3) பிலிப்பியர்
   4) உரோமையர் 5) தெசலோனிக்கேயர்

37. பிலிப்பியர் 2:5 – 11 திருமுகத்தில் கிறிஸ்துவின் வாழ்வில் மேலோங்கிக் காணப்படும் பண்பு களாவன.
   1) கீழ்ப்படிவு, தூய்மை 2) ஏழ்மை, அன்பு 3) தாழ்மை, கீழ்ப்படிவு
   4) பணிவு, அன்பு 5) தூய்மை, கீழ்ப்படிவு

agaram.lk

38. பிள்ளைகள் பெற்றோருக்கு சரியான முறையில் அன்பையும், மதிப்பையும், கவனிப்பையும் செலுத்துவதன் மூலம்.
   1) வெற்றிகள் கிட்டும்
   2) நீண்ட ஆயுளைப் பெறுவதாக பத்துக்கட்டளை எடுத்துக் காட்டுகின்றது.
   3) மீட்பிற்கு வழி கிடைக்கும்
   4) கடமைகளை நிறைவேற்றுதல்
   5) இறை பிள்ளைகளாகுதல்

39. இயேசுவின் சிலுவையின் மேல் எழுதப்பட்டிருந்த வார்த்தை.
   1) இறைமகன் 2) யூதரின் மீட்பர் 3) யூதரின் கடவுள்
   4) யூதரின் அரசன் 5) மெசியா

40. திருச்சபையின் ஆணிவேராகக் கருதப்படும் குழுவினர்
   1) 70 சீடர் 2) பெண் சீடர் 3) பரிசேயர்
   4) யூதர்கள் 5) பன்னிரு திருத்தூதர்



agaram.lk

41. "என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" என்ற கூற்றுடன் தொடர்புடைய சம்பவம்.
    1) இயேசுவின் பிறப்பு 2) தோற்றம் மாறுதல் 3) சீடர்களின் தெரிவு
    4) குணமடையும் நிகழ்வு 5) இயேசுவின் திருமுழுக்கு

42. இயேசுவுடன் 'மீண்டும் பிறத்தல்' பற்றி உரையாடியவர்.
    1) நிக்கதேமு 2) அரிமத்தியா யோசேப்பு 3) பேதுரு
    4) பவுல் 5) நந்தானியேல்

43. இயேசு நாசரேத்தூர் தொழுகைக் கூடத்தில் வாசித்த ஏட்டுச் சுருள்.
    1) எரேமியா 2) திருப்பாடல் 3) எசாயா
    4) எசேக்கியேல் 5) ஆமோஸ்

44. இயேசுவின் திருமுழுக்கின் போது தூய ஆவியானவர் புறா வடிவில் இறங்கிய நிகழ்வு நினைவுபடுத்துவது.
    1) இயேசுவின் அழைப்பை தெளிவுபடுத்துதல்
    2) உலக ஆரம்பத்தில் தண்ணீரின் மேல் அசைவாடிய கடவுளின் ஆவியை நினைவுபடுத்துதல்
    3) மனிதன் - இறைவன் பிரிவு முடிவிற்கு வருதல்
    4) பாவத்திலிருந்து மீட்பு கிடைத்தல்
    5) விண்ணுக்கும் மண்ணுக்குமிடையில் தொடர்பாடல்

45. பெந்தக்கோஸ்து என்பதன் பொருள் குறிப்பது
    1) நாற்பதாவது நாள் 2) ஏழாவது நாள் 3) ஐம்பதாவது நாள்
    4) எழுபதாவது நாள் 5) பன்னிரண்டாவது நாள்

46. இரண்டாம் நூற்றாண்டின் பிரசித்தமான திருச்சபைத் தந்தையாக விளங்கியவர்.
    1) புனித அத்தனாசியார் 2) புனித ஜெரோம் 3) புனித சிறில்
    4) புனித ஜஸ்டின் 5) புனித அகுஸ்தினார்

47. பேரரசனை கடவுள் என வணங்கும் படி கட்டளை இட்ட அரசன்.
    1) தொமிசியன் 2) திராஜன் 3) மாற்குஸ் அவுரேலியன்
    4) புனித ஜஸ்டின் 5) புனித அகுஸ்தினார்

48. 'அப்போலோஜியா' என்பதன் கிரேக்க சொல்லின் பொருள்
    1) மன்னிப்பு 2) பாதுகாப்பு 3) பராமரிப்பு
    4) அன்பின் விருந்து 5) தலைமைத்துவம்

49. கிறிஸ்தவ இலத்தீன் இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்பட்டவர்.
    1) ஒரிஜன் 2) அகுஸ்தினார் 3) சிறில்
    4) தெர்த்தூலியன் 5) அத்தனாசியார்

50. ஆரிய பேதகத்திற்கு எதிராக கூட்டப்பட்ட திருச்சங்கம்
    1) எபேசு 2) கல்சடோன் 3) இரண்டாம் வத்திக்கான்
    4) கொன்ஸ்தாந்தி நோபிள் 5) நிசேயா

(1 x 50 = 50 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணை பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Three Hours<br>Gr. 13 (2022) | 43 | T | II |

**பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களுமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

01) (i) இயேசுவின் சீடர்களில் இருவரின் பெயர்களைத் தருக.

(ii) இயேசு தம் சீடர்களுக்கு அளித்த அதிகாரங்கள் இரண்டு தருக.

(iii) இயேசு மறைத்தூதுப் பணிக்கு சீடர்களை அனுப்பும் போது கூறிய அறிவுரைகள் மூன்றினை விபரிக்குக.

(iv) இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு என அழைக்கப்பட்ட எம்மிடமிருந்து இயேசு எதிர் பார்க்கும் விடயங்கள் நான்கினை விபரிக்குக.

*(20 புள்ளிகள்)*

02) (i) விண்ணரசில் உள்ள உன்னத மதிப்பை எடுத்துக்காட்டுவதற்கு கூறப்படும் உவமைகள் இரண்டு தருக.

(ii) இயேசுவின் அருஞ் செயல்கள் இரண்டினை உதாரணத்துடன் குறிப்பிடுக?

(iii) ஏசேக்கியேல் இறைவாக்கினரால் முன்வைக்கப்படும் நல்லாயனின் பண்புகள் விபரிக்குக.

(iv) இன்றைய தலைவர்களிடம் காணப்பட வேண்டிய ஆயத்துவப் பண்புகள் நான்கினை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

03) (i) திருத் தொண்டர் பிலிப்பு சமாரியா நகரில் திருமுழுக்கு அளித்த இருவர் யார்?

(ii) திருத் தொண்டர் ஸ்தேவான், இயேசு இருவரின் மரணத்தின் போதும் நிகழ்ந்மத ஒற்றுமையான சம்பவங்கள் 2 தருக.

(iii) மிலான் சாசனம் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு அச்சாசனத்தின் மூலம் கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொண்ட சலுகைகள் 3 தருக.

(iv) கலாபனைக் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட விசேட பண்புகள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு முன் மாதிரியாக அமைகின்றது. ஆராய்க?

*(20 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

## பகுதி - II

04) (i) மலைப் பொழிவில் இயேசு கூறிய எட்டுப் பேறுகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இயேசுவின் மலைப் பொழிவு உமது கிறிஸ்தவ வாழ்விற்கு எவ்வாறு முக்கியத்துவம் உடையதாக அமைகின்றது என்பதை ஐந்து உதாரணங்கள் தந்து விளக்குக.
(20 புள்ளிகள்)

05) (i) குடும்பவாழ்வு பற்றி பவுல் எபேசியர் திருமுகத்தில் (5:22 – 6:4) குறிப்பிடும் விடயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய காலகட்டத்தில் பல குடும்பங்கள் சீர்குலைந்த நிலையில் உள்ளன இதற்கான காரணங்கள் ஐந்தினை முன்வைத்து ஆராய்க.? (10 புள்ளிகள்)

06) (i) போர்த்துக்கேயரின் ஆட்சியினால் இலங்கைக்கு கிடைத்த சாதகமான பெறுபேறுகள் பற்றி ஆராய்க? (10 புள்ளிகள்)

(ii) இலங்கையில் வெவ்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு கிறிஸ்தவ திருச்சபைகளின் பங்களிப்பு கிடைத்துள்ளது இக் கூற்றினை ஆராய்க? (20 புள்ளிகள்)

07) (i) "பெண்கள் பற்றிய கிறிஸ்தவ சிந்தனை" எனும் தொனிப் பொருளினை பின்வரும் இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

1. திருவிலிலியத்தில் பழைய ஏற்பாட்டில் தொடக்க நூலில் காணப்படும் பெண்கள்
2. புதிய ஏற்பாட்டில் மீட்பு செயலில் பங்கேற்ற பெண்கள். (10 புள்ளிகள்)

(ii) புதிய ஏற்பாட்டில் மீட்பு செயலில் பங்கேற்ற பெண்கள். (10 புள்ளிகள்)

08) (i) 16ஆம் நூற்றாண்டில் திருச்சபையின் மறுசீரமைப்புப் பணியை முன்னெடுத்துச் சென்ற துறவற சபைகள் ஐந்தினை பெயரிட்டு சுருக்கமாக ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) திரிதென்தீன் பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டதற்கான காரணத்தையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையம் விவரிக்குக. (10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk